இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 07.03.2026

# தமிழுக்கு நடிப்பும் இந்தித் திணிப்பும்!

திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவு வாயிலுக்கு இந்தியில் பெயர் சூட்டி இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. 'கர்தவ்ய த்வார்' என்பது இதன் பெயராம். கேட்டால், 'கடமையின் நுழைவாயில்' என்று பொருள் சொல்கிறார்கள். இந்தியைத் திணிப்பது ஒன்றுதான் பா.ஜ.க.வின் கடமை ஆகும். எளிதில் எந்த இடம் கிடைத்தாலும் அங்கு இந்தியைத் திணித்து விடுவதுதான் பா.ஜ.க.வின் வழக்கமான பழக்கம்.

திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவு வாயிலுக்கு இந்தியில் பெயர் வைத்துவிட்டார்கள் என்று தெரிய வந்ததும் திராவிட முன்னேற்றக் கழகத் தீரர்கள் திரண்டார்கள். கருப்பு மை கொண்டு இந்தி எழுத்தை அழித்துள்ளார்கள். "ரயில்வே நிர்வாகம் இதனை அகற்ற வேண்டும், இல்லாவிட்டால் போராட்டம் கடுமையாக இருக்கும்" என்று எச்சரித்தார்கள்.

'இந்தித் திணிப்பில் பா.ஜ.க. எல்லை மீறுகிறது' என்று எச்சரித்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். "வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களின் பெயரை 'பவிஷ்ய நிதிபவன்' ஆக்கிவிட்டார்கள். குற்றவியல் சட்டங்களுக்கு சமஸ்கிருதத்தில் பெயரை வைத்து அதனை ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சகம் 'ஜல்சக்தி'த் துறை ஆக்கப்பட்டு விட்டது. மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டத்தின் பெயரை இந்தியில் ஆக்கிவிட்டார்கள்" என்று பெரிய பட்டியலே போட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

**உள்துறை அமைச்சர் அமித்ஷா, இந்தி வளத்துறை அமைச்சராகவே எப்போதும் செயல்பட்டு வருகிறார். 2019 ஆம் ஆண்டு இந்திக்கு ஆதரவாக உள்துறை அமைச்சர் அமித்ஷா கருத்துக் கூறிய போது, "மீண்டும் 1965 கிளம்பும்" என்று தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். 'அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை' என்று உள்துறை அமைச்சர் விளக்கம் அளித்தார். 2012 ஆம் ஆண்டு என்.சி.இ.ஆர்.டி. வெளியிட்ட பாடப்புத்தகத்தில் 1965 மொழிப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் கருத்துப்படம் இடம்பெற்றிருந்தது. அதனை தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. அதன் பிறகு அந்தக் கருத்துப்படம் நீக்கப்பட்டது. இப்படித் தொடர்ந்து திணிப்பதும், எதிர்ப்பு வந்ததும் பின் வாங்குவதும் பா.ஜ.க.வின் நிலையாக உள்ளது.**

அவர்கள் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். நாம் அழித்துக் கொண்டே இருக்கிறோம்.

1950 ஆம் ஆண்டு முதல் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தி எழுத்துகளை அழிக்கத் தொடங்கின. அதன் பிறகுதான் புகைவண்டி நிலையங்களிலும், அஞ்சல் நிலையங்களிலும் தமிழில் எழுதியது ஒன்றிய அரசு.

1950 ஆம் ஆண்டு திருச்சியில் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டமானது தந்தை பெரியாராலும் தலைவர் கலைஞராலும் நடத்தப்பட்டது. அது முதல் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1ஆம் நாளை "இந்தி எழுத்து அழிப்பு நாளாக" இரண்டு இயக்கங்களும் பல ஆண்டுகளாக நடத்தி வந்தன. அதே திருச்சியில்தான் மீண்டும் இந்தி அழிப்பு நடந்து, அதனைப் பின்வாங்க வைத்துள்ளார்கள் திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகள்.

எத்தனை சாகசங்கள் செய்தாலும் இந்தி மேலாண்மையை தமிழ்நாடு ஏற்காது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கை தெளிவானது.

**1965 மார்ச் 4ஆம் தேதியன்று மாநிலங்களவையில் உரை யாற்றிய அண்ணா தனது மொழிக்கொள்கையை முழுமையாகத் தெளிவுபடுத்தினார்.**

1. **இந்தியாவின் ஒருபகுதி மக்களால் பேசப்படும் இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக முடியாது.**
2. **இந்தியாவில் உள்ள முக்கிய மொழிகளான 14 மொழிகளும் இந்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும்.**
3. **அந்தப் பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழி ஆகும் வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாக ஆக வேண்டும்.**
4. **ஆங்கிலத்தை தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ளலாம்.**
5. **எங்கள் தமிழ்மொழி மற்ற எதற்கும் தாழாத வகையில், ஆட்சிமொழி என்ற தகுதி தரப்படும் வரை, நான் அமைதி பெற மாட்டேன். மனநிறைவு கொள்ள மாட்டேன்.**

**- இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கை ஆகும். தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை ஆகும்.**

**இதே நிலையில் உறுதியாக இருக்கிறார் இன்றைய முதலமைச்சர். "இந்தியைத் திணிக்கும் புதிய தேசியக் கல்வித் திட்டத்தை நாம் ஏற்க மாட்டோம் என்று சொன்னதற்காக பள்ளிக் கல்வித் திட்டத்துக்குத் தர வேண்டிய ரூ.3 ஆயிரம் கோடி நிதியை நிறுத்தி வைத்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ரூ.5 ஆயிரம் கோடி என்ன, பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் மும்மொழித் திட்டத்தை ஏற்க மாட்டோம். என்னுள் ஓடுவது தலைவர் கலைஞரின் ரத்தம். நடராசன் - தாளமுத்து - ராசேந்திரன் போன்றவர்களின் கொள்கை உணர்ச்சியால் உந்தப்பட்டவன் என்பதால் தான் நான் அப்படிச் சொன்னேன்." என்று முழங்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.**


இந்தித் திணிப்புக்கு எதிராக 1965ஆம் ஆண்டு மாபெரும் மொழிப்போர் நடைபெற்றது. சனவரி 25ஆம் நாளை இதுவரை மொழிப்போர் தியாகிகள் நாளாக திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்து நினைவு கூர்ந்தது. அதனைப் பல்வேறு அரசியல் இயக்கங்களும் பின்பற்றி வருகின்றன. அந்த சனவரி 25ஆம் நாளை தமிழ்மொழித் தியாகிகள் நாளாக கடைப்பிடிக்க அரசாணை வெளியிட்ட அரசு 'திராவிட மாடல்' அரசு ஆகும். தமிழ் மொழித் தியாகிகள் எந்த நோக்கத்துக்காக தங்களது உயிரைத் தியாகம் செய்தார்களோ, அந்த நோக்கத்தோடு நாம் செயல்படுவதுதான் அந்தத் தியாகிகளுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி ஆகும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.3.2026) சென்னையில் நடைபெற்ற திரைப்பட தயாரிப்பாளர் கல்பாத்தி அகோரம் அவர்களின் சகோதரர் கல்பாத்தி –சுரேஷ் அவர்களின் மகன் அபிஷேக் கல்பாத்தி – விஷாலா ராமசாமி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நினைவில் வாழும் தமிழறிஞர் ஈரோடு தமிழன்பன் (ந. ஜெகதீசன்) அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட்டு அவரின் வாழ்க்கைத் துணையான திருமதி தி.பா.சாந்தகுமாரி அவர்களுக்கு நூலுரிமைத்தொகை 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் எழுத்தாளர் முனைவர் திருமதி தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் குடியிருப்புக்கான ஆவணங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்த நாள் – கரூர் மாவட்டத்தில்

# 3 லட்சத்து 30 ஆயிரம் குடும்பத்தினருக்கு நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து – பேச்சு!

*கரூர், மார்ச் 7 -*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்டத்தில் 3 லட்சத்து 30 ஆயிரம் குடும்பத்தினருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது என கரூர் தொகுதி கோடங்கிப்பட்டியில் நலத்திட்ட வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தெரிவித்தார்.*

*கரூர் சட்டமன்றத் தொகுதி கோடங்கிபட்டியில் கரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வீடு வீடாக சென்று பொதுமக்களை சந்தித்தார்.*

*பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:*

*கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதியிலும் உள்ள 3 லட்சத்து 30 ஆயிரம் குடும்பங்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று தொடங்கி வைக்கப் பட்டுள்ளது. ஒரு வார காலத்தில் இதனை நிறைவு செய்ய உள்ளோம்.*

*கரூர் மாவட்டத்திற்கு வரலாற்று சிறப்புமிக்க அரசு திட்டங்களை கரூருக்கு புதிய பேருந்து நிலையம், குளித்தலையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவ*



*மனை என இப்படி சொல்லிக் கண்டே போகலாம் . சுதந்திரம் பெற்றதில் இருந்து இதுவரை யாரும் வழங்காத அளவுக்கு அரசு மக்கள் நலத்திட்டங்களை, நமது ஒப்பற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி உள்ளார்கள். நாங்கள் செல்லும்போது மக்கள் மகிழ்ச்சியாக இதனை எங்களிடம் தெரிவித்து வருகின்றனர். இதை கேட்கும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது.*

*கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் 2021 தேர்தலில் பெற்ற வெற்றியை விட 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற தேர்தலில் மிக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற்று இரண்டாவது முறையாக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்பார்கள்.*

*எதிர்க்கட்சிகள் தொடர்ந்து விமர்சனம் செய்வதைப் பற்றி கேட்கிறீர்கள். பாரதிய ஜனதா ஆனாலும் சரி, அதிமுகவானாலும் சரி, புதிதாக வந்த கட்சியாக இருந்தாலும் சரி, எங்களைப் பற்றி பேசினால் தான் அவர்கள் மக்களிடம் போக முடியும் என நினைக்கிறார்கள். அதனால் எல்லா கட்சிகளும் திமுகவை பற்றியே கருத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தங்களது இருப்பைக் காட்டிக் கொள்வதற்கு அப்படி செய்கிறார்கள். யார் என்ன கருத்து கூறினார்கள் என்பது எங்களுக்கு ஒரு பொருட்டல்ல.*

*கரூர் மாவட்டத்தில் 1111 வாக்குச்சாவடிகளுக்கும் வெல்லும் தமிழ் பெண்கள் இயக்கத்தில் வீடு வீடாக பெண்கள் சென்று தேர்தல் களத்தில் சிறப்பாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக ஆவார்கள்.*

*இவ்வாறு வி.செந்தில் பாலாஜி கூறினார்.*



நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சி 'தமிழ்நாடு தலைகுனியாது' பொதுக்கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் செல்வராஜ், நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில்நகர தி.மு.க. செயலாளர் என்.ஆர்.சங்கர் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.